**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.5/2022 இன் அ.வ.எண்.77/2021**

ஸ்பீடு ரெக்கரியேசன் கிளப், பொள்ளாச்சி
அதற்காக அதன் செயலாளர் சிவசங்கர்

... மனுதாரர்/உத்தேச பிரதிவாதி

/ எதிர் /

1) பாக்கியம்
2) ரேவதி (தங்களுக்காகவும், அண்ணாமலை நகர், சின்னாம்பாளையத்தில் வசிப்பவர்களுக்காகவும்

... 1, 2 எதிர்மனுதார்கள்/வாதிகள்

3) சார் ஆட்சியர், பொள்ளாச்சி
4) முதுநிலை மேலாளர், டாஸ்மாக், கோவை மண்டலம்
5) மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கோவை தெற்கு மாவட்டம்
6) ஆயத்தீர்வை அலுவலர், கோவை
7) தமிழ்நாடு அரசு அதற்காக மாவட்ட ஆட்சியர், கோவை

... 3 முதல் 7 எதிர்மனுதார்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 12.02.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/உத்தேச பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.சுரேஷ், அவர்கள் ஆஜராகியும், 1, 2 ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் திரு.Su.செந்தில்குமார், அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## ஆணையுரை

மனுதாரரை அசல் வழக்கில் 6 ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1, விதி 10 மற்றும் பிரிவு

151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனு சங்கதியின் சுருக்கம்:</u>

வாதிகள் தங்களுக்காகவும், அண்ணாமலை நகர், சின்னாம்பாளையம் மக்களுக்காகவும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக, சூதாட்ட கிளப் மற்றும் மதுபான பார் அமைப்பதற்கு அனுமதி கொடுக்ககூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

2.2) அசல் வழக்கு தாக்கல் செய்ய வாதிகளுக்கு எந்த முகாந்திரமும் இல்லை. மேலும், வாதிகள் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1, விதி 8–ன் கீழ் மனு தாக்கல் செய்து, நாளிதழில் பொது விளம்பரமோ, தண்டோராவோ செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த காரணத்தின் அடிப்படையிலேயே வழக்கு நிராகரிக்கப்படவேண்டிய ஒன்றாகும். மனுதாரருக்கு பார் மற்றும் கிளப் நடத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. மனுதாரரும் ரூ.9 லட்சம் செலுத்தி அரசிடமிருந்து உரிமம் பெற்றுள்ளார். 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பல மனுக்களை அரசாங்க அதிகாரிகளுக்கு அனுப்பியதன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எப்படியிருப்பினும் இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் மனுதாரரையே பாதிக்கும். எனவே இவ்வழக்கிற்கு மனுதாரர் அவசிய தரப்பினர் என்பதால், மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1, 2ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சங்கதிகளின் சுருக்கம்.</u>

மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1, விதி 8–ன் கீழ் உரிய மனு தாக்கல் செய்து, பொது விளம்பரம், தண்டோரா ஆகியவை கொடுக்கப்பட்டு, நீதிமன்ற அனுமதியின் பேரிலேயே, வாதியின்

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை 1, 2 எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள். எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**6)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**7)** **<u>பிரச்சினை</u>** :

வாதிகள் தங்களுக்காகவும், அண்ணாமலை நகர், சின்னாம்பாளையம் மக்களுக்காகவும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக, சூதாட்ட கிளப் மற்றும் மதுபான பார் அமைப்பதற்கு அனுமதி கொடுக்ககூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

**7.2)** அசல் வழக்கு தாக்கல் செய்ய கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகளை எதிர்மனுதாரர்கள் கடைபிடிக்கவில்லை என்றும், அரசு கிளப் மற்றும் பார் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றும், அனுமதி பெறுவதற்காக மனுதாரர் பெரிய தொகையை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ளதாகவும், முறையாக அனைத்து விதிமுறைகளும் கடைபிடிக்கப்பட்டே பார் நடத்தப்படுகிறது என்றும், அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் முடிவின்படி, அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளும் மனுதாரரை பாதிக்கும் என்றும், எனவே, மனுதாரரை அசல் வழக்கில் 6–ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து உத்தரவிடவேண்டும் என்றும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.3)** நீதிமன்ற உத்தரவுப்படி நாளிதழ் விளம்பரம் செய்யப்பட்டு அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கமான செயல்முறைகளான பொது அறிவிப்பு, தண்டோரா போன்ற விதிமுறைகள்

கடைபிடிக்கப்பட்டு, வழக்கு தாக்கல் செய்ய அனுமதி பெறப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.4)** வழக்கு சொத்தில் மதுபான பார் அமைப்பதற்கு 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் அனுமதி வழங்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வழக்கு சொத்தில் அரசிற்கு ரூ.9 லட்சம் செலுத்தி, உரிமம் பெற்று, பொழுதுபோக்கு மற்றும் மதுபான பார் நடத்திவருவதாக, மனுதாரர் கூறியுள்ளார். மேற்கண்ட சங்கதியை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை. எனவே, இவ்வழக்கில் வழங்கப்படும் உத்தரவு அல்லது தீர்ப்பு மனுதாரரையும் கட்டுப்படுத்தும். மனுதாரரின்றி இவ்வழக்கில் கண்ட பிரச்சனையை முழுமையாக முடிவு செய்ய இயலாது என்றும் எனவே, மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரரை அசல் வழக்கில் 6–ம் பிரதிவாதியாக கட்சிசேர்த்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வாணையுரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டதை 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளான இன்று, என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2025.02.21 19:37:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>:**

– இல்லை –

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**– இல்லை –**

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2025.02.21 19:37:10 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பொள்ளாச்சி.**

-----------------------------------

<u>**அசல் / வரைவு ஆணையுரை**</u>

ஐ.ஏ.5/2022 இன் ஓ.எஸ்.77/2021

நாள் : 21.02.2025

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------